அபிநவ பத்திரிகை.

ஒரு மாதாந்தத் தமிழ்ப் பத்திரிகை.

பத்திராதிபர்கள். { கு. ரா. ஸ்ரீநிவாஸ ஐயங்கார், பி. ஏ.,
{ நா. ராமாநுஜாசாரியர், எம். ஏ., எல். டி.

புத்தகம் 1.] செப்டம்பர்மீ 30வ [சஞ்சிகை 2.

சூசீபத்திரம்.

ம்ருச்சகடிகை	...டி. எஸ். ஸ்ரீநிவாஸ ஐயங்கார், பி. ஏ.,	61
வேதாந்தஸாரம்	...நா. ராமாநுஜாசாரியர், எம். ஏ., எல். டி.	71
சரீரகசாஸ்திரம்	...டி. ஏ. கோபீநாதராவ், எம். ஏ.,	79
சுதவ்ருக்ஷம்	...கு. ரா. ஸ்ரீநிவாஸ ஐயங்கார், பி. ஏ.	85
ஜ்யோதிசாஸ்திரம்	...க. அரங்காசாரியர், எம். ஏ., எல். டி.	94
தக்ஷிணேஸ்வரப்பெருமான்	ஆ. வ.	101
நமது நாட்டின் கல்வி நிலை	ரா. ராஜமையங்கார், பி. ஏ.,	107

சென்னை:

அபிநவ பத்திரிகை ஆபீஸ்,

85, நாராயணமுதலி வீதி.

1902

வருஷ சந்தா ரூ. 3-0-0.] [தனிப்பிரதி ரூ. 0-4-0.

வேதாந்தஸாரம்.

II

அத்வைதம் என்று வழங்குகிற ஸ்ரீசங்கராசார்ய ஸ்வாமிகளுடைய மதத்தைப்பற்றிப் பேசுவதற்கு முன்னால், ஸர்வமதஸ்தர்களுக்கும் பொதுவான, தத்வசாஸ்திர ப்ரமேயப் பிரமாணங்களைப் பற்றி சற்று விசாரிப்போம். "மானாதீநா மேயஸித்தி:" என்று சொல்லியிருக்கிறபடி சேதனனை ப்ரமாதாவுக்கு ப்ரமாணங்களைக் கொண்டே பிரமேயங்களாகிற தத்வங்கள் ஸித்திக்கின்றன; அதாவது விஷயங்களுடைய யதார்த்த ஞானத்திற்கு அபாதிதமாயும் அந்யதாஸித்தங்களாயு மிருக்கின்ற பிரமாணங்களே காரணம். அப்படிப்பட்ட பிரமாணங்களாலே உற்பத்தியாகிற ஞானத்துக்குத்தான் நிச்சய ஞானமென்றும் யதார்த்த ஞானமென்றும், பிரமா என்றும் பெயர். அப்படியில்லாமல் ஒரு கரணத்தாலே ஞானமுண்டாய், அது தன்னைக் காட்டிலும் பிரபலமான வேறொரு அபாதிதப் பிரமாணத்தாலே பாதிக்கப்பட்டால் அதற்கு அயதார்த்தஞானமென்றும் பிரமம் என்றும் பெயர். இவையிரண்டிற்கும் உதாஹரணம். கயிற்றினிடத்தில் இது கயிறு என்கிற பிரத்யக்ஷ ஞானம் பிறந்தால் அதற்குப் பிறகு வேறொரு பிரமாணத்தாலும் பாதம் உண்டாகிறதில்லை, ஆகையினாலே அதற்கு யதார்த்த ஞானம் என்று பெயர். கயிற்றினிடத்தில் இது ஸர்ப்பம் என்கிற ஞானம் உண்டானால் அதற்கு பிறகு இது ஸர்ப்பமல்ல, கயிறு என்கிற அநுபவத்தால் அது பாதிக்கப்படுகிறது. ஆகையால் அது அந்யதாஞானம் அல்லது பிரமம் என்று சொல்லப்படும். அனுபவத்தில் அப்பிரமம் அதிஷ்டானமன்னியில் உண்டாகிறதில்லை, அதாவது அஸத்ய ஞானம் ஒரு ஸத்யவஸ்துவை ஆஸ்ரயிக்காமல் கேவலம் அபாவத்தினிடத்தில் ஜநிக்கிறதில்லை. அஸத்தியமாகிற ஸர்ப்பஞானம் ஸத்யமாகிற கயிற்றினிடத்திலும், அஸத்தியமாகிற வெள்ளி ஞானம், ஸத்யமாகிற சுக்தியினிடத்திலும் தான் உண்டாகும். அப்படியன்றி யாதொரு ஸத்யபதார்த்தமே யில்லாமல் கேவலம் அஸத்வஸ்துவை ஆஸ்ரயித்து ஸத்யஞானம் உண்டாகிறதில்லை யென்பது யாவருக்கும் அநுபவஸித்தம்.

வியவஹாரதசையில் ஸத்யஞானத்துக்குக் காரணமாயிருக்கிற பிரமாணங்கள் மூன்று. அவைகள் பிரத்தியக்ஷம், அனுமானம், சாப்தம் என்று சொல்லப்படுகின்றவைகள் உபமானம்:—ஐதிஹம் முதலிய மற்றவைகள் ஸ்வரூப நிரூபணம் பண்ணினால் இவைகளுக்குள் அந்தர்பூதங்களென்று காணலாம். இந்தப் பிரமாணங்களுக்குப் ப்ராமாண்யம் வேறொன்றாலே ஸித்திக்கிறதில்லை; அது ஸ்வதஸ்ஸித்தம். ஏனென்றால் ஞானத்துக்குப் ப்ராமாண்யம் ஸ்வாபாவிகமாய் தன்னைக்கொண்டே கிரஹிக்கப்படுகிறது. ஆனால் ஞானத்துக்கு அப்ராமாண்யமுமுண்டு. அது ஸ்வதஸ்ஸித்தமன்று; ஒரு ஞானத்தினுடைய ப்ராமாண்யம் வேறொரு ஞானத்தினால் பாதிக்கப்படுகிறபோது அந்தப் பிரபல ஞானத்தினுடைய விரோதத்தினால் உண்டாகிறது. அனுபவமென்று வழங்குகிற ஞானம்[1] ஸர்வபிரமேயங்களுக்கும் நேராகவாவது அல்லது பரம்பரையாயாவது காரணம். அந்த ஞானத்தை ஸூக்ஷ்ம யுக்திகளாலே அபலாபனம் பண்ணினால் ஒரு பிரமேயமும் ஸித்தியாமல் சூன்யவாதம் பிரஸங்கிக்கும். ஸர்வம் சூன்யம் என்கிற வாதிகளுக்கு வாதம்பண்ண யோக்கியதையில்லை. ஸ்வபரநிர்வாஹமும் வியவஹாரானுகுணமும் உள்ள ஞானத்தை மறுத்தால், ஸ்வமதத்தை ஸ்தாபிக்கவாவது, இதர மதத்தைக் கண்டிக்கவாவது சாதகபாதகமாயுள்ள பிரமாணங்கள் யாதொன்றும் ஏற்படாதபடியால் சூன்ய வாதிகளுக்கு ஒன்றும் ஸித்திக்காமல் வாதத்திற்கு அனர்ஹதையுண்டாகின்றது. ஆனால் ஞானத்தை ஒப்புக்கொண்டு அந்த ஞானமடியாகப் பிறக்கிற விஷயங்களுடைய ஸ்வரூபவிவேசனம் பண்ணுங்கால், ஞானத்தினாலுண்டாகிற விஷயஸத்ய (Testimony of consciousness) ஸாக்ஷித்வத்தை ஸந்தேஹித்து மறுதளிக்கலாம். அதாவது இந்திரியபிரத்யக்ஷத்தாலே உண்டாகிற பாஹ்ய பிரபஞ்சஞானம் பொய்யல்ல; விஷயமாகத் தோற்றுகிற பிரபஞ்சம் ஞானத்துக்கு வேறான சத்யவஸ்துவா? அல்லது கேவலம் ஞானகல்பிதமா? அல்லது ஒரு ஸத்யவஸ்துவினிடத்தில் ஞானத்தினாலுண்டாகிற அந்யதா ஞானமா? என்று இவ்வகையான ஸந்தேகங்களுண்டாகிறது நியாய விரோதமல்ல. இதற்கு இத்தேசத்துப் பூர்விக தத்வசாஸ்திரத்தில் க்யாதிவாதமென்றுபெயர். இந்த க்யாதிவாதம் இக்காலத்து ஐரோப்பிய தத்வசாஸ்திரங்களிலும்

1. Consciousness.

ண்டு. இம்மாதிரியான வாதங்களால் பூர்வீகர்களாலும்நவீன ஐரோப்பிய தத்வசாஸ்திரங்களாலும் ஏற்பட்டிருக்கிற மதங்கள் ஐந்து. அவையாவன:—அசத்க்யாதி, அந்யதாக்யாதி, ஆத்மக்யாதி, அநிர்வசநீயக்யாதி, ஸத்க்யாதி யென்பவைகள்.

இவைகளில் அசத்க்யாதிவாதமாவது,[2] உலகத்தில் ஒவ்வொரு மனுஷ்யனுடைய சகல அனுபவங்களும் ஆபாத திருஷ்டிக்கு இருவகைப் பட்டிருக்கின்றன. அனுபவங்கள் பாஹ்ய அனுபவரூபங்களான பிரபஞ்சானுபவங்களும், ஆந்தர அனுபவரூபங்களான ஆத்மானுபவங்களும ஆக இருவகைத்தாய் ஸ்வபாவத்தில் பிரிந்து, அநாத்மா என்றும் ஆதமா என்றும் வியவஹரிக்கப்படுகின்றன. இவ்விருவகையனுபவங்களும் ஒன்றற்கொன்று மாறுபாடில்லாமல் ஸ்வபாவத்திலேயே விருத்த தர்மங்களையுடையவைகளாய் ஞானத்திற்கு பிரகாசிக்கின்றன. அவைகளில் ஆத்மாவின் தர்மம் தனக்குத்தானே பிரகாசிப்பது; அநாத்மாவின தர்மம் தனக்குத்தானே பிரகாசியாமல் இதர வஸ்துவான ஆத்மாவுக்கே பிரகாசிக்கும் தன்மை. இத்தர்மங்களாலே ஆத்மாவுக்கு பிரத்தியக் என்றும், அநாத்மாவுக்கு பராக் என்றும் பெயர்களுண்டு. இங்கிலீஷ் தத்வ சாஸ்திரிகள் இவைகளை [3] ஸப்ஜெக்ட் என்றும் ஆப்ஜக்ட் [4] என்றும் வியவஹரிப்பார்கள்.

சாமான்ய ஞானத்திற்கு அநாத்மானுபவங்கள் ஆத்மாவுக்கு வேறான ஒரு பாஹிய வஸ்து நிஷ்டங்களாயும், ஆத்மானுபவங்கள் ஒரு ஸ்திரமான ஆத்மவஸ்து நிஷ்டங்களாயும தோற்றுகின்றன. உலகத்தில் வியவஹாரங்களும் அப்படியே யிருக்கின்றன. ஆனால் தத்வசாஸ்திர ஆராய்ச்சி செய்பவர்கள் இவ்வனுபவங்களைப் பற்றியும் அவைகள் ஸ்வரூபங்களைப்பற்றியும் வெவ்வேறு அபிப்பிராயப்படுகிறார்கள். அசத்க்யாதிவாதிகள் மேற்சொன்ன இருவிதமான அனுபவங்களை ஒப்புக்கொண்டு, அவைகளுக்கு ஆதாரமாகத் தோற்றுகிற ஆத்ம, அநாத்மவஸ்துக்களை அபலாபனம் பண்ணுகிறார்கள். அப்படி ஒப்புக்கொள்ளுகிற அனுபவரூபமான ஞானங்களையும் ஒரு நித்யமான ஞானநிஷ்டமாய்க்கொள்ளுகிறதில்லை வெவ்வேறு க்ஷணிகவர்த்திகளான ஞானங்கள பரஸ்பரஸம்பந்த நியமங்களாலே[5] வஸ்துக்களாகவும வஸ்து நிஷ்டதர்மங்களாகவும் தோற்றுகின்றன

2. Metaphysical Nihilism. 3. Subject. 4. Object. 5. laws of Association.

என்பர். இவர்களுக்குப் ப்ரவாஹரூபமான ஞானானுபவங்கள்தான் ஸத்யமாயுள்ளன. மற்ற ஞாத்ரு ஞேயாதிகள் கல்பிதங்கள். இதற்கு, அசத்தாகிற வஸ்துக்களிடத்தில் ஸத்ஞானமுண்டாகுமென்கிற படியினாலே அஸத்க்யாதிவாதம என்று பெயர். இம்மதத்தை ஒப்புக்கொண்டவர்கள் இந்துதேசத்தில் பௌத்தர்களில் மாத்தியமிகர்களும், ஆங்கில தேசத்தில் ஹ்யூம் என்பவரும. ஆங்கில தேசத்து தத்வ சாஸ்திரிகளான மில், பெயின் என்பவர்களுடைய மதத்தையும நிபுணரூபணம் பண்ணினால் அசத்க்யாதிவாதத்திலே தான் அவைகள் முடியும.

அந்யதாக்யாதிவாதிகள்.[6] ஆத்மாநாத்ம வஸ்துக்களை ஸத்யமாய் ஒப்புக்கொண்டு அவைகளுடைய பரஸ்பரஸந்நிகர்ஷத்தாலே உண்டாகிற ஞானத்திற்குத் தவிர அவைகளுடைய ஸ்வரூபங்களுக்கு ஒரு பொழுதும் ஒருவாற்றானும் பிரதீதி உண்டாகிறதில்லையென்கிறார்கள். ஆத்மாநாத்ம ஸ்வரூபங்கள் நியதமாய் ஞானத்துக்கு மறைந்திருக்குமென்றும், அவைகளால ஞானத்திலுண்டாகிற காரியரூபங்களான அனுபவங்கள்தாம் நமக்குத் தெரிகிறவைகளென்றும், அக்காரிய ரூபங்களாகிற அனுபவங்களாலே காரணரூபங்களான ஆத்மாக்யாத வஸ்துக்களை யனுமிதிக்கிறோமென்றும், அவர்கள் நினைக்கிறார்கள். இவர்களும் சத்க்யாதிவாதிகளும்தவிர மற்றவாதிகள் ஞானத்திற்கு ஸாபேக்ஷத்வநியமம் என்று ஒரு நியமத்தை ஒப்புக்கொண்டு, அந்த நியாயத்தால் ஞானத்துக்கு வஸ்து ஸ்வரூபஞானம் ஒருக்காலும் உண்டாவதுகூடாது என்று சித்தாந்தித்திருக்கிறார்கள். ஸாபேக்ஷத்வநியமமாவது:[7]—ஞானோத்பத்தி இந்திரியாதி ஸாபேக்ஷமன்னியில் உண்டாவதில்லை. அந்த இந்திரியங்கள் வஸ்து ஸ்வரூபங்களைக் காட்டாமல், வஸ்து நிஷ்டமான தர்மங்களையும் இருக்கிறபடி காட்டாமல அவைகளை ரூபம்மாற்றி ஞானத்திற்கு தோற்றுவிக்கின்றன. அது எப்படியென்றால் ஒரு வஸ்துவின் வர்ணமானது அதின் பரமாணுக்களுடைய ஒருவித சலனங்களாலேயுண்டாகிறதென்பது நவீன பிரகிருதி சாஸ்திரத்தின் சித்தாந்தம். கண்ணானது அவ்வித சலனங்களை கிரகிக்கமாட்டாமல் ஞானத்திற்கு அச்சலனங்களைமாற்றி வர்ண ரூபங்களாய் காண்பிக்கிறது. அதேமாதிரியாக வஸ்து நிஷ்டதர்மங்கள் எல்லாம்

6. Constuctive idealism. 7. Law of relativity.

இந்திரியங்களுக்கு மாறிமாறியே தோற்றுகின்றன. அதின் ஸ்வரூபம்தோற்றுகிறதில்லை நவீன தத்வசாஸ்திரிகளில்பெரும்பான்மையோர இந்த ஸாபேக்ஷத்வ நியமத்தை தங்கள் தங்களுக்கு அபிருசியான வெவ்வேறு அர்த்தங்களில் வெவ்வேறுரூபமாய் ஒப்புக்கொண்டு, சிலர் இந்திரியஸாபேக்ஷத்வமே ஞானத்திற்கு ஸ்வரூபம் என்றும், இந்திரியாதி நிரபேக்ஷ ஸாக்ஷாத்காரஸ்வரூப ஞானமென்பது ஒன்று மில்லையென்றும், மற்றவர்கள் ஸாபேக்ஷத்வ நியமத்தாலே, நிரபேக்ஷஞானமுண்டு என்பது ஏறபடுகிறபடியால், அது இந்த வியவஹார தசையில் இல்லையேயொழிய, வேறுதசையில வஸ்துஸ்வரூப ஸாக்ஷாத்ஞானம் உண்டாகலாமென்றும், நம்புகிறார்கள். இந்த மதத்தை ஒப்புக்கொண்டவர்கள் இந்து தேசத்தில் பௌத்தர்களில வைதேசிகளான வைபாஷிகர்க ளென்பவர்களும், ஐரோப்பாகண்டத்தில் ஸ்பெனஸர், ஹாமில்டன், காண்ட், முதலியவர்களும்.

ஆத்ம கியாதி வாதம்[8] என்பது ஞானரூபமான ஆத்மாவை ஒப்புக்கொண்டு, அர்த்தரூபங்களான வெளிப்பிரபஞ்சத்தை ஞான கல்பிதங்களென்றும், பிரபஞ்சத்து அவயவமாய்த்தோற்றுகிறபாஹ்யவஸ்துவை மித்யைஎன்றும் சொல்லுகிறது இவ்வாதிகளில் சிலர் அந்த ஞானரூபமான ஆத்மாவுக்கு ஞாதருத்வம்சுவாபாவிகமென்றும், சிலர் அதுகூட கல்பிதமென்றும சொலலுகிறார்கள். ஒப்புக்கொள்ளுகிற ஞானத்தைப்பற்றிககூட அது க்ஷணிக வர்த்தி யென்றும், க்ஷணிகவர்த்தியாயினும் பிரவாகரூபமாய் நித்தியமென்றும், சுவபாவததில் நித்யமாயுர வியவஹாரத்தில் க்ஷணிகமாயும், பிரவாஹரூபமாயும் தோற்று மென்றும், வெவ்வேறு விதமான வாதங்கள் உண்டு. பௌத்தமதத்தைச் சார்ந்த யோகாசாரியர்களும், அத்வைதிகளில் சிலரும், ஐரோப்பியர்களில பேர்க்கேலி, பிக்டே முதலியவர்களும் இவ்வபிப்பிராயத்தை அநுசரித்தவர்கள்.

அநிர்வசநீய க்யாதி வாதம் வேதாந்தமததகில் அத்வைதிகளில் பெரும்பான்மையோர் ஒப்புக்கொண்டது. அவர்கள் ஆத்மக்யாதிவாதிகளைப்போலவே, அர்த்தருபமான பாஹ்யபிரபஞ்சம் மித்யை என்றும், ஞானகல்பிதமென்றும், சொல்லுகிறார்கள். ஆனால் அப்படி அந்யதாக்யாதிரூபமான பிரபஞ்சகல்பனைக்குக்காரணமான தோஷம் ஞானத்திற்கு சுபாவமாயுள்ளது என்று ஆத்மக்யாதிவாதி

8. Pure Idealism.

கள் சொல்லுவார்கள். அத்வைதிகளோ, அதற்குக் காரணமாகிய தோஷம் சுத்தஞானத்திற்கு ஸ்வபாவமாயுள்ளதல்ல; அநாதியாய், அநிர்வசனீயமாய் (இன்னது என்று ஸ்வரூபநிர்வசனம் பண்ணக் கூடாததாய்), மூன்றுகுணத்தை உடையதாய், கொஞ்சம்பாவரூபமாயிருக்கிற, மாயாசப்தவாச்யமான அவித்யையாலுண்டாகிறதென்பர். இம்மாயையை அதின் காரியரூபங்களாலறிவது கூடுமேயொழிய, காரணரூபத்தால் அறிவதாவது, லக்ஷணம் சொல்லவாவது கூடாததாகையாலே, அது அநிர்வசநீயம் என்று சொல்லப்படுகிறது.

சத்கியாதிவாதிகள்[9] ஞானத்தை ஒருசத்யவஸ்துவான ஆத்மநிஷ்டமாயும் பிரகாசரூபமாயும் ஒப்புக்கொண்டு, அதற்கு வஸ்து பிரகாசகத்வமும், ஸத்யதாஸாக்ஷித்வமும் சுவாபாவிகமென்றும், அஸத்யஞானம் காரணதோஷபாதகப்பிரத்தியயத்தாலே உண்டாகிறதென்றும் சொல்லுகிறார்கள். ஆனால் ஆத்மாஞானத்துக்கு வேறுபட்டதன்று. ஞானஸ்வரூபமாகிற ஆத்மாவுக்கு ஞாதுருத்வம் சுவாபாவிகமென்கிறார்கள். அந்யதாக்யாதிவாதிகளைப்போலே ஜ்ஞேயரூபமான வெளிப்பிரபஞ்சத்தின் வஸ்துஸ்வரூபம் ஒருக்காலும் ஒருவாற்றாலும் அறிய முடியாதுஎன்று சொல்லவில்லை. ஞானத்திற்கு ஒவ்வொருவஸ்துவும் ஆத்மாவானாலும் அநாத்மாவானாலும் ஸ்வரூபவிசிஷ்டமாகவே தோற்றுமென்றும், ஸ்வரூபத்தைவிட்டு, விசேஷணங்களையும், விசேஷணங்களையும்விட்டு ஸ்வரூபத்தையும் அறிவது கூடாதென்றும், ஏகஞானத்தில் அவைகள்விசிஷ்டமாய், ஸ்வபரநிர்வாஹம்பண்ணிக்கொண்டு தோற்றுகிறபடியால, அவைகளை ஒன்றைவிட்டு ஒன்றை அபலாபனம் பண்ணக்கூடாதென்றும் ஸித்தாந்தித்திருக்கிறார்கள். இம்மதத்தை யனுசரித்தவர்கள் இந்த தேசத்தில் வேதாந்திகளில் விசிஷ்டாத்வைதமதஸ்தர்களும் ஸ்காட்லாண்டில் ரீட் என்பவரும்.

மேற்சொன்ன வாதிகள்தவிர, பிரகிருதிகாரணவாதிகள்[10] அர்த்தரூபமான பிரகிருதியினுடைய வொரு அவஸ்தாவிசேஷத்தால் ஞானம் என்பது உண்டாகிறதென்றும் பிறகு அந்த ஞானத்திற்கு பிரகிருதிவிஷயமாக தோற்றுகிறதென்றும் சொல்லுகிறார்கள். ஜடமாகிற பிரகிருதியிலிருந்து அதற்கு நேர்விரோதியான அஜடவஸ்து

9. Dualists. 10. Materialists.

வாகிற ஞானமுண்டாகிறது கூடாததாலும், பிரகிருதி ஸத்பாவத்திற்கு ஞானமேஸாக்ஷியாயும் காரணமாயு மிருப்பதாலும், ஞானத்தை ஒப்புக்கொள்ளாமல் பிரகிருதியை யொப்புக்கொள்ளுகிறவர்களுக்கு ஞானரூபமான அனுபவங்களும் சித்தியாமல் க்யாதிவாதமென்பது இல்லாமல போய்விடும். அவர்களுக்கு தத்வசாஸ்திரம்[11] என்பது ஒன்றுமில்லை. ப்ரகிருதிசாஸ்திரமே தத்வசாஸ்திரமாய் முடியும்.

மேல்வியவஹரிக்கப்பட்ட க்யாதிவாதங்களும், இன்னும்மற்ற காரியகாரணவாதமும், முதற்காரணவாதமும், குண குணிவாதமும் இவைபோல்வனமற்றவாதங்களும் தத்வசாஸ்திரங்களில் முக்கியமானவை. இவைகளைக்கொண்டுதான் அவரவர்களுடைய மதஸித்தாந்தங்கள் ஏற்படுகின்றன. இவைகளைப்பற்றி ஆங்காங்கு வேண்டிய இடங்களில் விசதமாக வியவஹரிக்கப்படும்.

தவிர, முன்சொல்லப்பட்ட பிரமாணங்களில் பிரத்தியக்ஷம் முக்கியமானப்பிரமாணம. அது இந்திரியார்த்த ஸம்பந்தத்தால் உண்டாகிறஞானம். இது எல்லாப்பிரமாணத்திலும் பலமானது. அனுமானஞானம் பிரத்தியக்ஷ ஞானத்தின் வழியாக உண்டாகிறபடியால் பிரத்தியக்ஷத்தைக்காட்டிலும் குறைந்தது. லிங்கமன்னியில் அனுமானஞான முண்டாகிறதில்லை. பிரத்தியக்ஷத்தால் வியாப்தி ஞானத்தைக்கிரஹித்து பிறகு ஸந்தேஹஸ்தலங்களில் வியாப்தி ஞானனுகுணமாக அனுமானம்பண்ணுகிறோம். அதாவது புகைக்கும் அக்னிக்குமுள்ள ஸாஹசர்யநியமத்தை, பிரத்தியக்ஷத்தாலே அடுப்புமுதலிய விடங்களில் கிரகித்து, பிறகு பர்வதத்தில் புகையைப்பார்த்து, திருஷ்டானுகுணமாகப் பர்வதத்திலும் நெருப்பை அனுமிதிக்கிறோம். ஆகையால் அனுமானம் பிரத்தியக்ஷோப ஜீவியானதால் பிரத்தியக்ஷத்தைக் காட்டிலும்பலமற்றது. பிரத்தியக்ஷ விரோதியான அனுமானம் பிரமாணமாகமாட்டாது. அனுமானத்திற்கு லாகவம் குணம். லாகவமாவது திருஷ்ட காரணங்களைக் கொண்டு ஒருகாரியத்தை நிரூபணம்பண்ணுவது கூடும்பொழுது அதிருஷ்டகாரணங்களை கற்பிப்பதும், இன்னும் இதுபோன்ற மற்றவைகளும். லாகவமல்லாதது கௌரவமென்று பெயர். அது அனுமானத்திற்கு ஒருகுற்றம்என்று எல்லோரும் ஒப்புக்கொண்டி

11. Metaphysics.

ருக்கிறார்கள். மூன்றாவது பிரமாணமான சாப்தம்என்பது யதார்த்த வக்தாவான ஒரு ஆப்தனுடையவார்த்தை. உலகத்தில் மனுஷ்யர்களுக்கு உண்டாகிற ஞானம சிறுபான்மை பிரத்தியக்ஷ அனுமானங்களாலும், பெரும்பான்மை சாப்தத்தினாலுமே உண்டாகிறது. ஒரு மனிதனிடத்திலிருக்கிற ஞானத்தில் பெரும்பாகம் அவனனுபவத்தினாலுண்டாகாமல், பிறர்போதனைகளாலும் கிரந்தரூபமான சாஸ்திரங்களாலும் உண்டாகிறது. ஆனால் ஆப்தனுடைய உண்மையை அறியவேண்டியது அவனுடைய பிரத்தியக்ஷ அனுமான ரூபமான அனுபவத்தா லானபடியால் சாப்தம் பிரத்தியக்ஷ அனுமானங்களைக் காட்டிலும் துர்பலமானது சாப்தஞானம் பிரத்தியக்ஷத்திற்காவது, பலமான அனுமானத்திற்காவது விரோதித்தால், அது யதார்த்தஞானமாகமாட்டாது. இது எல்லாத்தத்வசாஸதிரிகளுக்கும் சம்மதம். ஆனால் வைதிகமதத்தில் சாப்தத்தை லௌகிகமென்றும் வைதிகமென்றும் பிரித்து, லௌகிகத்திற்கு மேற்சொன்னபடி துர்பலத்தை ஒப்புக்கொண்டு, வைதிக சாப்தத்திற்கு ஸ்வதப்பிராமாண்யமுண்டு என்கிறார்கள். பிரத்தியக்ஷானுமானங்களுக்கு அதீதமான அதீந்திரிய விஷயங்களுககு நித்யமாயும், நிர்பாதமாயுமிருக்கிற சாஸ்திரமே பிரமாணம் என்றும், அப்படிப்பட்ட சாஸ்திரம் வேதமென்றும, அதீந்திரிய விஷயங்களில், கேவலானுமானத்தைக்காட்டிலும் சாப்தம் பலமானதென்றும், பிரததியக்ஷ விரோதங்கூட பாதமாகமாட்டாதென்றும்வைதிகர்கள் சொல்லுகிறார்கள். இவ்விதமான கக்ஷியை ஒவ்வொரு மதஸ்தரும் தங்கள் தங்கள் மதக்கிரந்தங்களை குறித்து சொல்லக்கூடுமானதாலும், அதை ஒப்புக்கொண்டால அதின் வழியே அனேகவாதங்கேளற்படுகிறபடியாலும், இவ்வியாஸத்தில் அதைநீக்கி யாவரும் ஒப்புக்கொள்ளுகிற பிரமாணஙகளையே, பிரமாணங்களாக எடுத்துக்கொண்டு விஷயங்கள் வியவஹரிக்கப்படுகின்றன. ஒரேமதத்தில் ஸுூத்தியர்கள் வாதம்பண்ணினால இந்த சாபதப்பிரமாணம் பிரயோஜனப்படுமேயொழிய, பரஸ்பரவிருத்தங்களான அனேகமதங்களை விசாரிக்கும்பொழுது எல்லாராலு மங்கீகரிக்கப்பட்ட பிரமாணங்களைத் தவிர இவ்விதப்ப்ரமாணம், தத்வச்நிசயததிற்கு அனுகூலமாகமாட்டாது.

நா. ராமானுஜாசாரியர்.

சுதல்ருக்ஷம்.

அத்தியாயம். 4

ஒரு புதிய படம்.

ஒருநாட் காலையில் மூங்கிலாலய முக்காலியை எடுத்து எதிரே நிறுத்திக்கொண்டு முக்காலியின் ஒருபுறத்து வெளியே சித்திரப் பலகையை வைத்தேன். வர்ணங்களெல்லாவற்றையும் குழைத்துக் கொண்டேன்; உடனே வர்ணம் குழைத்த பலகையை எனது இடக்கைக் கட்டைவிரலில் மாட்டிக்கொண்டு, வெகுநாட்களாய்க் கொஞ்சங் கொஞ்சமாக எழுதிக்கொண்டுவந்த படத்தைச் சீர்திருத்திக் கொண்டுவந்தேன், ஓர் ஆடவன் பிறரறியாதபடி தனது காதலியை முத்தமிடுவதுபோல எழுதியது அப்படம். சற்று நேரமான பிறகு நான் களிப்புற்றேன். அப்படத்திற்கு என்னாற் செய்யக்கூடிய வைகளை யெல்லாஞ் செய்துவிட்டேன், அதை அடிக்கடி உற்றுப்பார்த்தேன். அதற்குமேல நான் செய்ய கூடியது இன்னதென்று நான் பொறுத்துப் பொறுத்து யோசித்துப் பார்த்தும் எனதறிவிற்கொன்றும் எட்டவில்லை. அச்சமயத்தில் எனது சிநேகிதனான விசுவநாதன் அங்கு வந்து சேர்ந்தான். உடனே "ஏய்! வெகு நன்றாயிருக்கிறது நீ எழுதியது" என்று கூச்சலிட்டுக்கொண்டே எனதருகில் வந்து நின்றான்.

ஒன்றையுங் கவனியாது எனது படத்திலேயே மனதை முழுதும் செலுத்தியிருந்த யான், அவனைத் திரும்பிப்பார்த்து, "வா அப்பா!" என்றேன்.

"வெகு நன்றாயிருக்கிறது" என்றான் மறுபடியும்,

"வந்தனம்."

"நான் பொய் சொல்லவில்லை. சத்தியமாகவே உனது படம் வெகு அழகியதாகவே யிருக்கிறது."

"நீ பொய் சொன்னாயென்றேனோ நான்?"

"இ - ல் - லை."

"பின்னை யென்ன?"

"நான் எனக்குத் தோற்றியதைச் சொன்னேன். இதை எங்கே பிடித்தாய்?"

"பிடிப்பதென்ன?"

"கேட்டேன். என்ன அழகாய் முத்தமிடுகிறான் பார். இதைப் பார்த்துக்கொண்டிருந்தாலே ஆனந்தமாயிருக்கும் போலிருக்கிறதே?"

நான் சும்மா நின்றேன்.

மறுபடியும் "சுற்றிலு மென்ன தோட்டமோ?" என்றான்.

"ஆமாம்."

"அடாடாடா! நான் அதோ நிற்கும் சிறு குளத்தையும் அதன் கரையிலுள்ள சிறிய பறவைகளையும் இந்நேரம் கவனிக்கவில்லையே"

"அப்படியா?"

அப்புறம் படத்தையும் தொட்டுக்காட்டி, "இதுவென்ன தோட்டத்திலுள்ள ரோஜா மலரோ?" என்றான்.

"ஆமாம்."

"மல்லிகை மொட்டுக்கூட தெரிகிறதே"

"சரிதான்."

"நான் தூரத்தில்போய் நின்று பார்க்கிறேன்" என்று சொல்லித் தூரப்போய் நின்றுகொண்டு, "அது என்ன ஆலமரமா?" என்று கேட்டான்.

"ஆமாம்."

"வெகு நன்றாய் இருக்கிறது அம்மரம். ஹாஹாஹா! வெகு அற்புதமாயன்றோ இப்படம் எழுதப்பட்டிருக்கின்றது? நீ இவ்வளவு எழுதுவாயென்று நான் சிறிதேனும் நினைக்கவில்லை. அப்படி நான் சொல்லுகிறேனென்று என்மேற் கோபங்கொள்ளாதே."

"கோபமென்ன?"

"ராகவா! இங்கேவா ஒரு அதிசயம்" என்று உரத்துக்கூப்பிட்டான் விசுவநாதன்.

"ஏன்?" என்று இருந்தவிடமிருந்து பதிற் சொன்னான்.

"சீக்கிரம் வா."

"என்ன? சொல்லு."

"நீவா சொல்லுகிறேன்."

"நான்வந்துவிட்டால் நீ சொல்லுவதென்ன?"

"வருவாயா மாட்டாயா?"

"என்னதற்காக?"

"காரியமாய்த்தான்?"

"என்னகாரியம்?"

"என்னவோ, வெகு பெரியமனிதனாய்த் தானிருக்கிறாய். இங்குவா. ராமநுஜன் ஒரு அற்புதமான படம் எழுதியிருக்கிறானெனக் கூப்பிடுகிறேன். இருப்பிடத்தை விட்டுக் கிளம்பமாட்டேன் என்கிறாயே."

"ஏதோபடித்துக்கொண்டிருந்தேன். இதோ வந்துவிட்டேன் அப்பா!" என்று சொல்லிக்கொண்டே மெல்ல மெல்ல எழுந்து வந்தான். அவன் வந்தவுடன்,

"இதோ பார்த்தாயா படத்தை" என்றான் விசுவநாதன்.

"இதுவா?" என்று, நான் புதிதாய் எழுதிய படத்தை ராகவன் சுட்டிக்காண்பித்தான்.

"இதுதான் அப்பா!"

"இதுவா?"

"இதுதான். இதுதான்."

"நீ எழுதியதா இது? என்று திகைத்து விழித்துக்கொண்டு என்னைக்கேட்டான் ராகவன்.

"ஆமாம்" என்று சிரித்துக்கொண்டே பதில் சொன்னேன்.

"என்ன? நான் சொன்னால் நம்பிக்கையில்லையோ?" என்றான் விசுவநாதன்.

"இல்லை—" என்றான் ராகவன்.

"இல்லையென்ன?"

"படம் நிரம்பவும் நன்றாயிருந்தது."

"நன்றாயிருந்தால் வேறு யாராவதுதான் எழுதியிருக்கவேண்டுமோ? நம்மவன் எழுதாவிடில் உன்னையேன்நான் கூப்பிடுகிறேன்?"

"நிரம்பவும் அற்புதமாய்த்தான் இருக்கிறது."

"அதினுள்ளே நன்றாய் உற்றுப்பார்."

"என்ன ?"

"பார் சொல்லுகிறேன்."

"பார்த்தேன்."

"ஒன்றும் தெரியவில்லை ?"

"தடாகமொன்று தெரிகிறது."

"அப்புறம் ?"

"அநேகம் மலர்கள் அதிற் காணப்படுகின்றன."

"அடா ! அதையான் பார்க்கவில்லையே" என்று சொல்லிக்கொண்டே, படத்தை நெருங்கி அதை உற்றுப்பார்த்தான். சில விநாடிகளுக்கெல்லாம் "ஆமாம் அப்பா ! ஆமாம்" என்றான்.

"நிரம்பவும் நன்றாகத்தான் இருக்கிறது. இருவர் முகமும் அழகாகவும் ஒருவரோடொருவர் பேசுவது போலுமேதான் இருக்கிறது. தூர நின்று பார்த்தால் உயிருமுண்டோவெனச் சந்தேகிக்கும்படியாய் நேரிடும்போலிருக்கிறது."

"ராமாநுஜம் ! எப்படி எழுதுகிறது சொல்லு. நான் இச்சித்திரம் எழுதக் கற்றுக்கொள்ளுகிறேன். என்னபடிப்பு போ ! கண்டதையும் கேட்டதையும் நெட்டுருப் போட்டுக்கொண்டிருக்க வேண்டியிருக்கிறது" என என்னை நோக்கிக் கேட்டான்,

"தானாகவே பழக்கமிருந்தால வருகிறது. இது என்ன மிக உயர்ந்த தேவவித்தையா ?" என்றேன்.

"சரிதான் ! சரிதான் !! நானும்தான் படிக்கிறேன். நமது சிவராமன் நம்மவ்வளவு கூடப்படிபபதில்லை. அவன் எப்பொழுதும் முதலிலேயே இருக்கிறான். நான் இருககுமிடம்தான் உஙகளுக்குத் தெரியுமே ?"

"சொல்லிமுடி" என்றான் விசுவநாதன்.

"என்னவோ ஒன்றுதனியாயிருக்கிறது. அதில்லாவிடில் எவ்வளவு உழைத்தும் பயனில்லைதான். அதுவுமிருந்து நாமும் உழைத்தோமானால் மிகவும் நன்றாகத்தானிருக்கும்,

"என்ன வேண்டுமென்கிறாய் ?"

"எனக்கு சொல்லத் தெரியவில்லை. நம்மவர்கள் அது உடையவர்களை வரப்பிரசாதிகள் என்பார்கள்."

"சரிதான்; சரிதான்; இங்கு ஏது அது?"

"எனக்கு வரப்பிரசாதம் இல்லையா?"

"இல்லையென்றேனோ நான்?"

"பின்னை என்னவோ சொல்லுகிறாயே?"

"என்ன சொன்னேன்? சாதாரணமாய்—"

"வரபிரசாதிகளுக்குத்தான் அதுவரும் என்றாயோ?"

"ஆமாம். அதனால் உனக்குவரபிரசாதம் உண்டென்றாவது இல்லையென்றாவது நான் சொல்லவில்லை"

"சரி, போதும்."

"நல்ல பேச்சு இது."

"நான் போய்வரட்டுமா?"

"சரி!" என்றும் இருவரும்.

இராகவன போயவிட்டான்.

"என் அப்பா! நான் கற்றுக்கொள்ளட்டுமா?" என்றான் விசுவநாதன்.

"நீ அப்படிச் செய்தாயாகில் என்னாலானமட்டும் உனக்குநான் உதவிசெய்வேன்."

"சரி, அவ்வளவுதான் எனக்கு வேண்டும்."

"எவ்வளவு வேண்டுமோ அவ்வளவுஞ் செய்வேன்; உனக்கில்லாமல் நான் யாருக்கு என்ன செய்யப்போகிறேன்?"

"நாம்போகவேண்டிய நேரமாயிற்று. போய்வருவோமா!" எனவே,

"எங்கே போகவேண்டுமே?"

"நீ இன்று காலேஜுக்குப்போகவில்லை?"

"நான்போகவில்லை."

"என் அப்பா! படிப்பைக் கெடுத்துக்கொள்ளுகிறாய்?"

எம். ஏ பரீக்ஷயில் தேறிவிட்டாயானல் இன்னமுமநலம் தானே?"

"ஆமாம்—"

"சரி! போய்வருகிறேன்." என்று சொல்லிக்கொண்டே போய்விட்டான்.

சிறிது நேரத்திற்கு ஒன்றும் தோற்றாமல் நான் அறைக்குள்ளே இங்குமங்கும் அலைந்துகொண்டிருந்தேன். அண்டையிலிருந்த கிறிஸ்தவன்காலேஜில் பத்துமணி அடித்துவிட்டான். ஸ்நானம் பண்ணக் கீழே யிறங்கினேன்.

அத்தியாயம். 5

எனதுவாழ்க்கையின் பயனென்?

அன்றுமத்தியயனமே நான் (Shakespeare) சேக்ஷ்பியர் நாடகங்களுளொன்றாய (Hamlet) ஹாம்லெட் என்பதை எடுத்துவாசித்துக்கொண்டிருந்தேன. நான் வேறொன்றையுங் கவனியாமல் அந்நாடகம் வாசிப்பதிலேயே ஆழ்ந்திருந்தேன். அப்பொழுது ஹாம்லெட் என்பவனது தற்கூற்றை வாசித்தேன். 'நாமோபிறந்துவிட்டோம். இப்பொழுது நாம் உயிர்வைத்திருப்பது நலமோ? இறப்பது நலமோ? பழிபாவம் நிரம்பிய உலகின் கொடுமைகளைப் பொறுத்துக் கொண்டு உயிர் வைத்திருக்கலாமா?' இதை வாசித்தேன். எனக்கு மேலே வாசிக்க ஓடவில்லை. திரும்பவும்திரும்பவும் அவ்வரிகளையே வாசித்தேன். உடனே புத்தகம்தானாகவே கையினின்றுங் கீழே விழுந்தது. நானும் எனது சாய் நாற்காலியிற் சாய்ந்துகொண்டு அறையினது உத்திரங்களையே பார்த்துக்கொண்டிருந்தேன். எனக்கும் இந்தக்கேள்வி இப்பொழுது இல்லையா? 'இருப்பதா? இறப்பதா? உலகத்தினது கஷ்டங்களையனுபவித்துகொண்டு இருப்பதா? அல்லது இறப்பதா? அவனுக்குத்தோற்றாத இன்னொன்றும் எனக்குத் தோற்றியிருக்கிறது, இவ்வுலகத் துன்பங்களை விட்டு நீங்கி ஒருவருமறியாதபடி தனிமையில் இருந்து விடலாமோ? உலகத்தோர் என்னைப்பற்றி என்ன சொல்லுகிறார்கள்? இவன் பி. ஏ. பரீக்ஷையில் தேறிவிட்டான், வேண்டிய அளவு பொருளுமிருக்கிறது. வேறு என்ன

வேண்டும்? ,என்கிறார்கள். அவர்கள் பித்தர்கள். பி. ஏ. பரீக்ஷை தேறினால் உலகத்தில் வேண்டியதெல்லாங் கிடைத்துவிடுமோ? தடையில்லாமற்கூட சிறுவேலைகள் கிடைப்பதில்லை. ஆனால் உலகத்தோர் மாதத்திற்கு 20 அல்லது 25 ரூபாய் யாரேனும் சம்பாதிப்பாரேயாகில் அவரை மிக்க அதிர்ஷ்டசாலி யென்கிறார்கள். என்ன வருமை? என்ன வருமை? நிதிக்குவியல் என்று வழங்கி வந்த நமது தேசம் என்ன க்ஷீணதிசையையடைந்தது? நாடுநாடாக வாங்கக்கூடிய திரவியம் காவிரிப்பட்டணத்து வர்த்தகர்களிடம் இருந்ததன்றோ?

ஆரமு மகிலுந் தூசுந் துகிரு
மாசறு முத்து மணியும் பொன்னும்
மருங்கல வெறுகைகையோ டளந்து கடையறியா
வளந்தலை மயங்கிய நனந்தலை மறுகு

எங்கே? நமது நாட்டில் அப்புறம் வியாபாரமென்பது இன்னதென்று கூடவனன்றோ தெரியாமற் போய்விட்டது? நமது தனம், நமது பெருமை, நமது பெரியோர்கள் நினைவு, முதலியவை யெல்லாம் சூரிய வெப்பத்தால் மறைந்த நீர் போல, போவது கூடத்தெரியாமலன்றோ போய்விட்டது? போன அப்புறம் தான் அவைகாணோமென்பதையறிகிறோம். கம்பன், காளிதாஸன், சாத்தனார் வித்யாரண்யர் முதலியோரையெல்லாம் மறந்து, உலகத்தில் உயர்ந்த கவியாரென்று கேட்டால் உடனே ஷேக்ஸ்பியர் என்கிறோம், ஷேக்ஸ்பியர் உயர்ந்த கவிதான். ஆனால் நமது நாட்டுப் பெரியோர்களை நாம் அறிந்து அவர்களை மதியாவிடில் நாம் என் முன்னுக்குவருவோம்? அது நிற்க, நமக்குள் 2000 ரூபாய் ஒருவன் வைத்துக் கொண்டிருப்பானாகில் பெரிய தனவந்தனாக மதிக்கப்படுகிறான். ஛ீ! ஛ீ! என்ன தரித்திரம்! இங்கிலாந்தில் ஒருவன் 10000. ரூபாய் இருந்ததற்கூடஏழையாகவே மதிக்கப்படுகிறான். இப்படியிருக்க எனக்கு 20 அல்லது 25 ரூபாய் வேலைகிடைக்குமாகில், அதை நம்மவர் பெரியதாகவே கொள்ளுவதற்குத்தடையென்ன? பி ஏ. பி.ஏ யென்று பித்தம்பிடித்தார்போல நமமவர்கத்துகிறார்கள்? என்ன பி. ஏ.? நம்நாடு என்ற ஆசை வெகுவாய் அவர்களிடம் இருப்பதில்லை. பரீக்ஷை தேறியவுடனே எங்கேயாவது ஒரு பொந்திற்குள் அடைபட்டிருக்கவேண்டும். அப்புறம் வாழ்நாள் முழுவதும் கொஞ்ச ரூபாய்க்காக ஒரு பொந்தில் அடைபட்டிருந்து வெளி

யென்பது இன்னதென்றே யறியாமல், தனது தரையைப் பற்றியும், தான் எழுதியதைப் பற்றியும் தவிர, சூரியன் கிழக்கேயிருந்து மேற்கே போகிறதா வென்றாவது நக்ஷத்திரங்கள் ஆகாயத்தில் இருக்கின்றனவாவென்றாவதுகூட அறியாமல் காலங்கழித்துக்கொண்டிருக்கவேண்டும். நன்றாயிருக்கிறது. யார் என்ன சொன்னாலும் நான் அவ்விதம் இருக்கவேமாட்டேன். ஐயோ! நமது நாட்டோருக்கு தற்காலத்தில் தங்களுக்காகவும், தங்களுடைய உறவினர்களுக்காகவும் தாங்கள் பணம் சம்பாதிக்கவேண்டுமென்பதே தவிர, மனிதனுக்குப்புத்தியென்றொன்று இருக்கிறதென்றாவது, சம்பாதிப்பதைத் தவிர உயரியகடைமைகள் இருக்கின்றன வென்றாவது நினைவே யில்லை நம்நாட்டில் தற்காலத்திலிருக்கும் பெரியோர்கள், அதாவது பரீக்ஷைகளில் தேறிப் பணம் சம்பாதித்துக்கொண்டிருப்பவர்கள், என்ன செய்கிறார்கள்? 'ஐயா! நமது கோவில்களெல்லாம் எவ்வெவற்றிற்கு ஏற்பட்டனவோ அவற்றிற்குப் பயன்படவில்லையே யென்றுநாம்கேட்டால்! நீ ஏன்சும்மா கஷ்டப்படுகிறாய்? உலகத்திற்காக ஒருவன் விசனிப்பது சரியா? நடக்கிறது நடக்கட்டும். நீ படித்து நல்லஸ்திதிக்கு வருவதற்கு முயற்சி செய்' என்கிறார்கள். நமது நாட்டுப் பெண்கள் சற்றும் படிப்பில்லாமல் வீணாக மிருகங்கள் போல இருந்துகொண்டிருக்கிறார்களே, என்று கேட்டாலோ; 'இப்படித் தான் பி. ஏ, பரீக்ஷையில் தேறினேன் என்ற செருக்கில் கேட்பது வழக்கம். நானும் முதலில் இப்படித் தான் கேட்டுக் கொண்டிருந்தேன். பெண்பிள்ளைகளுக்குப் படிப்பென்ன? படித்தால் அவர்கள் நம்மை மரியாதை செய்யமாட்டார்கள் நம்மைச் சற்றும் லக்ஷியஞ் செய்யமாட்டார்கள், எப்பொழுதும் அவர்களை நாம் அடக்கிக்கொண்டுவருவதே நன்று' என்கிறார்கள். அந்தோ! பித்தன். இவன்பணம் பெருமை முதலியவற்றையெல்லாம் இழந்தவன். இவன் இவனுடைய மேலோர்களாகியவர்களின் முன்னேபோய் நிற்கவேண்டும்; தலைகுனியவேண்டும். அவன் என்னவைதாலும் கேட்டுக்கொண்டிருக்கவேண்டும். இன்னொருவன் காலின்கீழ் அகப்பட்டுக்கொண்டு தவிக்கும் புழு தன்காலில் வேறொரு பிராணியைப்போட்டு அரைக்கவேண்டுமென்றே ஆசைகொண்டால் வெகு அழகு தான். நமநாட்டோர் காலின்கீழ் அகப்படுவோர் யார்? அவர்கள் வீட்டுப்பெண்கள் தாம். ஆகையின் அவர்களைத்தான் தங்கள் காலின் கீழ் போட்டரைக்கவேண்டுமென்கிறார்கள்.

நம்நாட்டில் பெரியோர்கள் நமது சுயபாஷையை மறந்தார்கள். குழந்தைக்குப் பிறப்பதற்கு முன்னேகூட, கூடுமானல் இங்கிலீஷ் சொலலிக் கொடுப்பாாகள் போலேயிருக்கிறதே! இங்கிலீஷ் சொல்லிக்கொடுக்கட்டும. சுயபாஷையில் குழந்தைகளுக்கு ஒருவித ஆசையை உண்டுபண்ணி, அப்புறம இங்கிலீஷைச் சொல்லிகொடுத்தால் நலமாயிருக்கும். இவன் கொஞ்சம் இங்கிலீஷ் படித்தவுடன் சுயபாஷையை மறப்பதும் தவிற வெறுக்கவும் தொடங்குகிறுன். இரண்டு சிநேகிதர்கள் ஒருவரையொருவர் சந்தித்தாலகுட்மார்னிங் (Good morning) என்கிறுர்களேதவிர நமஸ்காரம் அலலது வந்தனம் எனறு சொல்லுவது பிழை யென்றும் நினைக்கிறுர்கள். சுயபாஷையாகிய தமிழில் பேசினுல ஒருவரையொருவர் நன்றுயறிந்துகொள்ளக கூடுமாயிருக்க, ஒருவரோடொருவர் இங்கிலீஷில பேசிக்கொண்டு ஒருவர் சொலலுவதை இன்னெருவர் சரியாய் அறிந்துகொள்ளாமல் சில சமயங்களில் மனஸ்தாபமும் உண்டாவதுண்டு. பேசுகிற இங்கிலீஷோ? அதைப்பற்றி விசாரிக்கவே வேண்டாம். இவாகள் பேசுவதற்குள் பாஷையைக் கொன்றுவிடுவாாகள். இப்படிக் கொஞசநாளான பிறகு இஙகிலீஷும் சரியாய் பேசவருவதில்லை. தமிழும் சரியாய்ப் பேசவருவதில்லை. இவ்விதமசுயபாஷையையும்பேசத்தெரியாமல் பிறபாஷையையும் தவருய்ப் பேசிக்கொண்டன்றே இருக்கிறேம். அநதோ! என்ன தீக்கதி; நம்மையும் நம்மவரையும நாமே விருமபாவிடில் பிறன் நம்மை வெறுப்பதற்குத் தடையென்ன? ஒருவரையொருவர் வெறுப்பதுடன் மாத்திரமலலாமல், பிறன் நமமுளொருவனை வெறுப்பானுகில் நாம் அதைக்கண்டு சந்தோஷிக்கிறேம். சீ! சீ! இனி இந்நினைப்பே வேண்டாம். நமது நாடு இங்கிலாந்து பிரதான மந்திரியாகிய சாலிஸ்பரி(Salisbury)சொல்லியவாறு இறக்கும் நாடுபோலத் தான் இருக்கிறது. ஒற்றுமை யில்லாவிடில் யாருங்கூடி உயிர்வாழ்ந்திருப்பதே மிகக்கடினம்.

கு. ரா. ஸ்ரீநிவாஸ ஐயங்கார்.

ஜீவசாஸ்திரம்.

இவ்வுலகத்திலுள்ள பதார்த்தங்களை, சராசரம் (உயிர்உள்ளன, உயிர் இல்லாதன) என்னும் இரண்டு பிரிவுகளுக்குள் அடக்குவது வழக்கம். ஜீவவர்க்கத்தைச் சரவர்க்கம் என்பதற்கு காரணம், ஜந்துக்களுக்கு சலனம் முக்கியகுணம் என்னும் கொள்கையே. நகரும் சக்தியையே முக்கிய குணமாகப் பாவித்து இவ்விதம் இரு வகுப்பாகப் பிரித்தால், ஒரே இடத்தில் நகராமல் வாழ்ந்துக்கொண்டிருக்கும் ஜீவனுள்ளவைகளை, அசரங்கள் என்றே சொல்லவேண்டிவருகிறது. இவ்விதம் சேர்ப்பது தவறு. நம்பெண்கள் அழகு நிமித்தம் அணியும் பவளங்களின் உற்பத்திக்குக் காரணமாகிற பிராணிகளும் அவைபோன்றவைகளும் நகராமல், ஒரே இடத்தில் நிலையாக வேரூன்றினாற்போல் தங்கி வாழ்கின்றன. இவைகளையும், புற்பூண்டு, செடி மரங்களையும், சலனமே பிரதானமாகக் கொண்டால் அசரங்களாக எண்ணவேண்டிவரும். ஆதலின் ஜீவவர்க்கத்திற்கு நகரும் சக்தியை முக்கியமான குணமாகப் பாவித்தலை மறுத்தல்அவசியம்.

இதைப் பிரதான மாக்காவிடில், வேறு என்ன குணங்களை அனுசரித்து இப்பிரிவுகளைப் பிரிக்கவேண்டுமென்பதை நிதானித்துப் பார்ப்போம். உயிர் இல்லாத வஸ்துக்கள்—கல், இரும்பு முதலியன—எவ்வளவு காலமானாலும், தம் உட்கூறுமாறாமல் போட்ட இடத்திலேயே, கிடக்கும். யாராவது அதை எடுத்துச் சின்ன பின்னப் படுத்தினாலொழிய, உட்கூறாவது உருவமாவது மாறுவதில்லை. அளவில் குறைவதுமில்லை; வளர்ந்து அதிகப்படுவதுமில்லை; ஆகாரத்தை எதிர்பார்க்கிறதுமில்லை. ஜீவனுள்ளவைகளோ, சதா தன்உட்கூறில் மாறுபாடுகள் அடைந்துகொண்டே இருப்பதுடன்கூட, உருவமும் பெருக்கும். ஆகாரத்தை அபேக்ஷிக்கும் இவைகள் ஆகாரத்தை உட்கொண்டு, அதைத்தன் உள்ளிருக்கும் பதார்த்தங்களாக மாற்றிப் புராதனமாயிருப்பதுடன், இதை மேலும் மேலும் சேர்ப்பதினாற்றன் ஆகாரத்தில்* பெருக்கிறது. உயிர் இல்லாத வஸ்துக்களில் வளர்

*. சுற்றளவு,

ச்சி சில சமயங்களில் உண்டானாலும், பதார்த்தம் வெளிப்புறத்தில் சேர்ப்பதினால்தான் உண்டாகிறது. பிரஜாபிவிர்த்தி பண்ணுதல் கல் முதலியன போன்ற உயிர் இல்லாதவைகளுக்கு அசாத்தியம்; ஜீவ னுள்ளவைகளுக்கு இதுதான்முக்கியகடமை. அவைகளில் உண்டா கும் எல்லாமாறுபாடுகளும், வளர்ச்சி ஏர்பாடுகளும் சகலமும் பிர ஜாபிவிர்த்திக்குச சகாயமாகவேதான்.

ஆகையினால் பிரஜாபிவிருத்தி சக்தி, ஆகாரத்தை உட்கொண்டு ஆகாரம் அதிகபபடுத்தும் சக்தி, சதாசர்வகாலமும் உட்கூறில் மாறு பாடுகள் அடைந்தபடியே இருப்பது, ஆகிய இவைகள் தாம் ஜீவ ஜந்துக்களின முக்கிய குணங்களாகப் பாவிக்கப்படவேண்டும்.

இக்குணங்கள், மரம், புற்பூண்டு செடிகளுக்கும் இருத்தலின், இவைகளும் ஜீவவர்க்கத்தில் ஐக்கியப்படுத்த வேண்டியவைக ளே. சாதாரணமாய் ஒரு விருக்ஷத்திற்கும் ஒரு பெரிய மிருகத்து க்கும் வெகு வித்தியாசங்களிருப்பதால், நாம் இவைகளை ஒரே வர்க் கதில் சேர்க்கத் தகுந்தவைகள், என்று எண்ணுவதில்லை. விருக்ஷங் களை விருக்ஷவர்க்கத்திலும் ஜந்துக்களைப் பிராணிவர்க்கத்திலும் சேர் க்கிறோம்.வெகு அற்பமான பிராணிகளையும்,செடிவர்க்கத்தில் உள்ள நுட்பமானவைகளையும் ஒத்துப்பார்த்தால் அதிக வித்தியாசம் புலப் படாது. இப்படி இவ்விருவகையாகப்பிரிப்பது அசாத்தியம் என்று தோன்றும். மேலும் இவ்விரண்டுவர்க்கங்களில் சேர்க்கும் சகல ஜந் துக்களுக்கும் மூலப்பிரதானவஸ்து ஒரே மாதிரியானவஸ்துதான். அவ்வஸ்துவை "ஆங்கிலேயரும் ஐரோப்பியரும்" ஜீவிதபரம அணு† என்கிறார்கள்.

இவ்விரு வர்க்கங்களின் முக்கிய அம்சங்களை அறியும்பொருட் டு இவ்விரண்டுவர்க்கங்களின் குணங்களை ஆராய்ந்து பார்த்து, வித்தி யாசங்களை நிர்த்தாரணப்படுத்தலாம். பிராணிகள், தம் பிரஜோத்பத் திசெய்கிறது,வளர்கிறது, ஆகாரத்தை உட்கொள்ளுகிறது; புற்பூண் டுகளும் இங்ஙனமே செய்கின்றன. ஆனால் ஆகாரம் சேகரிப்பதில் வித்தியாசம் உண்டு. மிருகங்கள் முதலியன தம் ஆகாரத்துக்கு வேண்டியபதார்த்தங்களை தாமே உண்டுபண்ணிக்கொள்ள சக்தியற் றவைகள். அதாவது, தம் ஜீவ இரக்ஷணார்த்தம், இதரப் பிராணிக ளையாவது, புற்பூண்டுகளையாவது அல்லது இவைகளில உண்டா

†. Protoplasm,

க்கிச் சேகரித்து வைத்திருக்கும் பதார்த்தங்களையாவது தாம் புசிக்கும். புற்பூண்டுகளோ தங்களுக்கு ஆகாரத்தை, ஜலம், உப்பு, கரியமலவாயு இவைகளைக்கொண்டு, உண்டுபண்ணிக்கொள்ளும். விருக்ஷம் முதலியவற்றிற்கோ இது அனாவசியம். அசரவர்க்கத்தில் சேர்ந்த சில உப்புகள், ஜலம், கரியமல வாயு, பிராணவாயு§ என்னும் காற்று இவைகளை உட்கொண்டு, செடிகள் முதலியன சூரிய கிரணங்களின் உஷ்ணத்தின் சகாயத்தால் இவ்வஸ்துக்களை பின்னப் படுத்தி வேறுவிதமாக ஒன்றாகச் சேர்த்து, தமக்கு வேண்டிய உணவாக மாற்றிக்கொள்ளுகின்றன. இச்சக்திக்கு மூலகாரணம், இலைகளிலும் இளைகளிலுமுள்ள பசுமையான வஸ்துதான்.

ஜீவனுள்ள ஒருசெடியை ஓர் இயந்திரமாகப் பாவிக்கலாம். ஆனால் மனிதனால் ஆக்கப்பட்ட இயந்திரங்களை விட வெகு சிக்கானது. இதன் கடமை, சூரியகிரணங்களின்றும் வெப்பத்தை உட்கொண்டு, இவ்வுலகத்தின்கண் வேலை செய்யவேண்டிய சக்திக்கு ஆதாரமாகிற வஸ்துக்களை அதிகப்படுத்துவதுதான்.

மரங்கள் முதலியன ஏன் உண்டாயிருக்கின்றன? அவைகள் என்ன காரணார்த்தம் சிருஷ்டிக்கப்பட்டன?

இவ்விடைகளுக்கு மறுமொழி—மனிதர்களுக்கும் இதர ஜீவஜந்துக்களுக்கும் உபயோகத்திற்கு, என்பதுதான். செடிகளில் உண்டாகும் கனிகள் மனிதர்களுக்கும், இதரஜந்துக்களுக்கும் ஆகாரமாகவும், புஷ்பங்கள் முதலியன மனிதர்கள் பார்த்து சந்தோஷப்படுவதற்காகவும் ஏற்பட்டிருக்கின்றன என்பது நம்மில அநேகருடைய கொள்கை. இக்கொள்கை உண்மையாயின், மனிதர்கள் சஞ்சாரம் இல்லாத விடங்களிலும், அவர்கள் போவதற்கு அசாத்தியமான இடங்களிலும்தான், கண்ணுக்கு வெகு அழகான புஷ்பங்களும் சில அருமையான கனிகளும், ஏராளமாயிருக்கின்றனவே இதுவேன்? மனிதன் தன் புத்தியினால் தனக்கு உதவும் வஸ்துக்களை சோதனையினால் அறிந்து, உபயோகப் படுத்திக்கொள்ளுகிறானேயொழிய சிருஷ்டி இவன் நிமித்த மன்று. உயிர் அமைந்து, எப்போதும் வேலை செய்துக்கொண்டும், ஒன்றோடு ஒன்று போட்டி போட்டுக்கொண்டிருக்கும் இவைகளுக்கு முக்கிய காரியம், தம் பிரஜாபிவிருத்திதான். செடிகளின் கூறுகள் அனைத்தும் இக்காரியத்

§ Oxygen.

திற்குத்தான் அமைக்கப்பட்டிருக்கின்றன. புஷ்பங்களின் உருவம், வர்ணம், சுகந்தம், இவைகளும் இன்னும் இதர உபாயங்களும், பிரஜாபிவிருத்திக்கு அனுகுணமாக இருப்பதற்காக அமைக்கப்பட்டிருக்கின்ற சாதனங்கள்.

ஒவ்வொரு செடிக்கும் நம்மைப்போலவே பிறப்பு, வாழ்கை, விருத்தாப்பியம், இறப்பு முதலியவை உண்டு. வித்துகள் முளைப்பதுதான் ஒரு செடிக்கு பிறப்பு; முளையுண்டாகி அது வளர்வதுதான், பாலியப்பிராயம்; இது பெரியதாய்ப் புஷ்பித்து கிளைத்து வாழ்ந்துகொண்டிருப்பதுதான், வலிய பிராயம்; இலைகள் கிளைகள் பழுத்து விழுந்து கிளைகளும் உலர்ந்து, முழுமையும் க்ஷீணதிசை யடைவதுதான் விருத்தாப்பியம்; உலர்ந்து கீழே விழுந்து கட்டையாய்விடுவதுதான் சாவு

செடியின் கட்டு.

பிராணிகளுடைய தேகங்கள் பற்பல விதமாக இருப்பது போல, செடிகள் பலவாரா யிருப்பினும், ஜந்துகள் உடர் கூறுகளில் பலவித வித்தியாசங்கள் இருப்பதுபோல செடிகளில் இல்லை. ஆகையால், விருக்ஷவாக்கத்தின் சுவபாவங்களையும் இயற்கையமைப்பையு மறியும்பொருட்டு ஏதாவது ஒரு செடியைப் பரிசோதித்தால், இவ்வர்க்கத்தின் அமைப்புக்களும் வாழும் விதமும் நன்று விளங்கும்.

இதோ அச்சிட்டிருக்கும் பின்னைச் செடியைக் கவனித்துப் பார்ப்போம்.

இச்செடியில் வேர் கிளைகள் ஆகிய இரண்டு உருப்புகள் இருக்கின்றன. இவற்றுள் வேராவது, பூமியில் புதைந்திருக்கும்பாகம்; கிளையாவது பூமிக்குமேல் நேராய் உயர்ந்து, காற்றும் வெளிச்சமும் நன்றாய்ப் படும்படியாய் வெளியிலே வளர்ந்து வருவது. இவ்விரண்டிற்கும் மத்தியில் படத்தில் வலதுபுறத்தில் உருண்டையாய்ப் புலப்படுவது தான்வித்து. இவ்வித்துக்கு மேல்புறமிருப்பது முழுவதும் தான் கிளை. இக்கிளையின் பாகங்கள் தண்டும் இலைகளும் தான் இலைகள் தண்டில் சேர்க்கப்பட்டிருக்கும் இடம் தான் கணு என்று சொல்லப்படும்; கணுக்கள் இரண்டிற்கும் இடையிலிருக்கும் பாகத்தை கணுமத்தியபாகம் என்று சொல்லலாம்.

வித்துக்குக் கீழே நாலாபக்கங்களிலும் மெல்லிய கம்பிகள் போல இருக்கிறவைகள் வேர்கள். தண்டின் அடிபுறத்திலிருந்து கோணாமல் நேராய்க் கீழ் நோக்கிப்போவது தான், நிலை அல்லது உயிர் வேர். மற்றவை யனைத்தும் கிளைவேர்கள் தாம.

வேர்கள் சாதாரணமாய்ப் பூமியில் நாலாபக்கங்களிலும் கிளைத்துப் பரவிவருவதினால் தான், மரங்கள்முதலியவைகள் கீழே விழாமல் நேராய் நிலைநிற்கின்றன. ஒரு செடியைப் பூமியினின்று பிடுங்கிக்கொஞ்ச நாழிகை வைத்திருந்தால் வாடிச்சோர்ந்து போகின்றது. இவ்வண்ணம் சோர்வடைந்தும், அதை எடுத்து வேரை ஜலத்தில் ஆழ்த்தினவத்தால், கொஞ்ச நேரத்துக்குப் பின்பு வாட்டம் வடிந்து முன்போலவே செடியானது விரைத்து விடும். இதனால் நாம் அறியவேண்டிய விஷயம் என்ன? பூமியினின்றும் பிடுங்கின உடனே சரியாயிருந்தாலும் பின்பு வாட்டம் உண்டாகிறது ஏன்? சூரியவெப்பமும் காற்றும் இச்செடியிலுள்ள ஜலத்தை ஆவியாக்கி வெளிப்படுத்திவிடுகிறது.அதனால் தான் வாட்டம்.மறுபடியும் வேரை ஜலத்தில் அழுத்தியதும் விரைக்கதனால், வேர்வழியாக ஜலம் உட்செல்லுகிறது. செடிகளின் வேர்கள் பூமியிலிருக்கும் ஜலத்தை ஆகர்ஷித்து, தண்டின் வழியாக இலைகளுக்கும் கிளைகளுக்கும் செலுத்துகிறது என்பது இதனால் நாம் அறிந்துகொள்ளலாம்.

சாதாரணமாய்ப் பூமியில் வேர்களானது நாலாபக்கங்களிலும் பரவி யிருக்கின்றன. ஒரு பெரிய மரத்தின்வேர்கள் நேராக 50 அல்லது 60 கஜம் ஆழமும், பக்கங்களில் 100-150கஜம் வரையிலும் ஓடுவது சாதாரணம். பெரிய மரங்களின் மேற்கிளைகளும் இலைகளும் அதிகமாயிருப்பதினால், இவைகளினின்றும் ஆவியாய வெளியே செல்லுகிற ஜலம் அதிகம். மேலும் மேலும் பூமியிலிருந்து ஜலம் உட்கொண்டிருந்தாலொழிய, இப்போக்குக்கும் வரவுக்கும் சரிப்படாது. உட்செல்லும் ஜலம் வெளிப்படுவதைவிட அதிகமாகாவிடில் செடி மரணமடையும. இம்மாதிரியாகாமலிருக்கத் தான் நாலாபக்கங்களிலும வேர்கள் இருக்கின்றன.

பூமியில ஜலமானது தேக்கமாய் இல்லாததாலும்,ஜலம் பூமியின் மேற் பாகங்களில் அதிக சூக்ஷ்மமாய் இருப்பதாலும், ஈரத்தைத் தேடிக்கொண்டே வேர்கள் நாலாபக்கங்களிலும் வளர்ந்து செல்லுகின்றன.

வேர்களுக்குள் இவ்விதமாக நீர் உட்செல்லுகிறது என்பதை யறிய, நுனிவேர்களின் கூரைப்பரிசோதித்துப் பார்க்கவேண்டும். புதிய நுனிவேர்கள் சிறியதாயும் அதின் நுனிபாகம கொஞ்சம் வளர்ந்தும் இருக்கும். இதைப் பூதக்கண்ணாடியின் வழியாய் பார்த்தால் முழுமையும் சிறு சிறு அரைகளால் அமைக்கப்பட்டிருப்பது தெரியவரும். நுனியில் மாத்திரம் தனியாக இவ்விதச் சிறு அறைகளால் அமைக்கப்பட்டதோருறைஇருக்கும். நுனிப்பாகத்திற்குக் கொஞ்சம் பின்புறம் மட்டுந்தான் இந்த உறை இருக்கும். அதற்கு மேல் ஏதொன்றும் மூடப்படுகிறதில்லை; இப்பாகத்திற்குச் சுமார் $\frac{1}{8}$ அல்லது $\frac{1}{4}$ அங்குலத்திற்குமேல் வெகு நுட்பமான சிறு சிறு குழாய்கள் இருக்கின்றன. இவைகளை வேர் ரோமங்கள் என்றுசொல்லலாம். இவைகள் வெகு நுட்பமானவைகளாயினும்,செடிகள் வாழ்க்கைக்கு அத்தியந்த ஆவசியமானவை. இச்சிறுகுழாய்கள் 3/25 அங்குலத்திற்கு அதிகப்படாமலும், 1/100 அங்குலத்திற்குக் கீழ்ப்படாமலும் இருக்கும். இதோ அச்சிட்டிருக்கும் படத்தினுல் இவ்விஷயங்கள் நன்று விளங்கும்.இச்சிறு வேர் ரோமங்களைச்சுற்றிலும் சிறுசிறு கல்லுகள் ஒட்டிக்கொண்டிருக்கும்.இவைகளிலிருக்கும் ஜலம் தான் இக்குழாய்களுக்குள் சென்று நுனிவேர் மூலமாய் மேற்சென்று, தண்டிற்குள் பிரவேசிக்கின்றது. இங்ஙனம் ஒரு குழாய்க்குள் புகும் ஜலம் வெகு கொஞ்சமானாலும் அனேக கோடி வேர்ரோமங்கள் ஒவ்வொரு செடிக்கும் இருப்பதால்,மொத்தமாய்ப் போதுமான நீர் செடிக்குட் செல்லும். இச்சிறு குழாய்கள் ஈரமான இடங்களில் தான் உண்டாகும். ஈரம் நீங்கியதும் இவ்வேர் ரோமங்களும் அழிந்து விடும். நூதனமாக மேலும் மேலும் இளம்வேர்கள் உண்டாகிக்கொண்டே இருக்கும். ஒரு சிறு வேரிலுள்ள உலர்ந்த ரோமங்களுக்குப் பதில் ஒன்றிற்குப் பத்தாக நூதனமானவைகள் கிளம்பும்.

நாம் அதிக உப்பாயிராத நிலத்தில் வளர்ந்துகொண்டிருக்கும் முளைகளை, வேர்கள் அராமல் ஜாக்கிரதையாய் பெயர்த்துப் பார்த்தால், இசசிறுவேர் ரோமங்களில் நிரைய மண் அணுக்கைகள் ஒட்டிக்கொண்டிருக்கும். இம்மண்ணை ஜலத்தில் அலசிவிட்டால் அவ் ரோமங்கள் நன்றாய்ப் புலப்படும்.

இவ்வேர் நுனிகள், ஈரமாயிருக்கிற இடங்களைத் தான் தேடிக்கொண்டே போகின்றன என்று முன்னமே சொன்னோம். செடிக்கு ஆகார பதார்த்தங்கள் உண்டாக்கிக்கொள்ள அவசியமான சில

வஸ்துக்கள் இந்த பூமியிலிருக்கும் ஜலத்தில் கரைந்திருப்பதால் தான், இங்ஙனம் வேர்கள் அவ்விடங்களையே நோக்கி ஓடி, அங்கு கிளைத்துப் பரவுகின்றன.

வேர்களின் முக்கிய உபயோகங்கள், மரங்கள், செடிகள் கீழே விழுந்து விடாமல் தாங்கிக்கொண்டிருப்பதும், உணவு பதார்த்தங்கள் உண்டாகும்பொருட்டு ஜலத்தையும் சில உப்புகளையும் ஆகரித்து உட்செலுத்துவதுமே.

க, அரங்காசாரியர்.

நமது நாட்டின் கல்வி நிலை.

“குழந்தையை அதன் இஷ்டப்படி விட்டுவிடு; குழந்தை அழுது ஏதேனும் கேட்குமாகில் இல்லையென்று சொல்லாதே; குழந்தையைப் பலஹீனனாக்காமல், பலவானாயிருக்கும்படி செய்துவந்தால் அவன் பின்னும் தெளிந்த புத்தியுடனும் நற்குணங்களுடனு மிருப்பான். குழந்தையை விஷமஞ்செய்ததற்காகக் கண்டிக்கக்கூடாது. சிறுவயதில் அதிக வார்த்தைகளைச் சொல்லிக்கொடுத்து, குழந்தையின் மனத்தைக் கனப்படுத்தக்கூடாது. சிறுவர்கள் நினைத்தப்படி விழட்டும், குதிக்கட்டும்; நீ சொன்னபடி உடனே நடக்கவில்லையென்று குழந்தையைக் கண்டிக்காதே. பாலனுடன் வாதஞ் செய்யலாகாது. நல்லெண்ணங்களுடன், நற்காரியங்களைச் செய்யும்படியாகச் சொல்லிக்கொடு. பிறரெவருக்கும் தீங்கு செய்யக்கூடாதென்பதைக் கற்பி. உலகத்திலுள்ள அநேகம் விஷயங்களைத்தானே பார்த்து, அவற்றை அநுபவித்துக் கொஞ்சம்கொஞ்சமாக அறிந்து கொள்ளட்டும். பன்னிரண்டு வயது வரையிலும் புத்தகமென்பது இன்னதென்று அவன் அறியக்கூடாது. பதினைந்தாம் வயதில் எழுதப்படிக்கத்தெரிந்தாற்போதும். முதலிலே சிறுவனைப் பழக்கத்தால் பலசாலியாக்கவேண்டும். பார்த்தமாத்திரம் கூட்டவோ, அளக்கவோ, நிறுக்கவோ தெரியவேண்டும்; காலத்தை நிர்ணயிக்கவும் சங்கீதத்தைக்கேட்டு ஆனந்திக்கவும் கற்றுக்கொள்ளவேண்டும்; சாதாரணமான சாப்பாடுதான் அவனுக்குக் கொடுக்கவேண்டும்; ஆனால் வேண்டியவளவு அவன் சாப்பிடட்டும். இப்படிச் சிறுவனொருவன் இருப்பானேயாகில், நன்னடத்தை யுடையவனாகவும் கபடமற்ற சுபாவத்தை யுடையவனாகவும், வீண்பேச்சுப் பேசாதவனுமாக அவன் ஆவான். அவன் செய்வது இன்னதென்று அவனுக்குத் தெரியும்.

“பதினைந்து வயதிற்குமேல் உபாத்தியாயர் பதின்மடங்காக இச்சிறுவனுடன் உழைக்கவேண்டும். சரித்திரம், ஜனசமூகம், உலகத்திலுள்ள சகல விஷயங்களையும்பற்றி இப்பொழுதுதான் சொல்லிக்கொடுக்கத் தொடங்கவேண்டும். ஆனால், உபயோகமில்லாத

தும், படிப்பதற்குக் கஷ்டமாயிருக்கும் பாடங்களை இப்பொழுது கற்பிக்கக்கூடாது. இப்படியே நடந்துவருமாகில் சிலவருஷங்களுக்கெல்லாம், சகல சாஸ்திரங்களையுங் கற்றறிந்த நிபுணனாய் விடுவான்."

இவ்விதம் பிரான்ஸ் தேசத்திலிருந்த ரூஸோ என்பவர் கல்வியைப்பற்றிப் பேசும்போது சொல்லியிருக்கிறார்.

ஆனால் ஒரு நாட்டிலும் இவர் சொல்லியபடி முழுவதும் நடத்தப்படவில்லை.

இவர் சொல்லியதினின்றும் நம் நாட்டோர் அறிந்துகொள்ள வேண்டிய விஷயம் பலவுள.

மிகச் சிறுபிராயத்திலேயே நம் நாட்டோர் குழந்தைக்குக் கல்வி கற்பிக்கத் தொடங்குகிறார்கள். அதனால் குழந்தை மனம் கலங்கிப்போவதுடன், சீக்கிர மரணமும், தேகமெலிமையும் உண்டாகின்றன.

இவற்றையெல்லாம் பற்றிப் பின்பு பேசுவோம். இப்பொழுது, பின் வரும் சிற்சில கணக்குகளைக் கவனித்துப் பார்த்து வாருங்கள்.

ஜெர்மனி.	ஸ்விட்ஸர்லாண்ட்.	ஐக்கிய மாகாணங்கள்.	ஆஸ்ட்ரேலியா.	ருஷியா.
பெர்லின்	பேசல்	ஹார்வர்ட்	மெல்போர்ன்	டார்பட்
ப்ரெஸ்லா	பெர்ன்	யேல்	அடிலேட்	ஹெல்ஸிங்பார்ஸ்
பான்	ஜெனீவா	பென்ஸல்வேனியா		மாஸ்கோ
காட்டிங்கன்	ல்யூஸேன்	ஜான்ஹாப்கின்ஸ்		கீப்
லீப்ஸிக		கொலம்பியா		காஸன்
ம்யூனிச்		கார்னெல்		
ஸ்டாஸ்பர்க்		ப்ரௌன்		
ட்யூபின்ஜன்		ப்ரின்ஸ்டன்		
ஹால்		மிசிகன்		
மார்பர்க்		வர்ஜினியா		
க்ரீப்ஸ்வால்ட்		காலிபோர்னியா		
கானிக்ஸ்பர்க்				

109, 110 ஆம் பக்கங்களிலிருப்பவை அவ்வவ் தேசங்களிலிருக்கும் சர்வகலாசங்கள்.

இங்கிலாந்து.	பிரான்ஸ்.	இடலி.	இந்தியா.
கெம்ப்ரிட்ஜ்	பாரிஸ்	நேபில்ஸ்	கல்கத்தா
ஆக்ஸ்போர்ட்	பாய்டர்ஸ்	படுவா	பம்பாய்
டர்ஹாம்	கென்	வெர்செல்லி	மதராஸ்
லண்டன்	போர்டோ	பேவியா	அல்லஹாபாத்
விக்டோரியா	வாலன்ஸ்	அரெஸ்ஸோ	பஞ்சாப்.
சென்ட் ஆண்ட்ரூஸ்	நான்டிஸ்	ரோம்	
க்ளாஸ்கோ	போர்ஜிஸ்	ப்ளாரென்ஸ்	
அபர்டீன்	மான்ட்பெல்லியர்		
எடின்பரோ	டூலூஸ்		
பெல்பாஸ்ட்	ஆர்லீன்ஸ்		
	அவிக்னன்		
	க்ரெனோபில்		

தேசம்.	விஸ்தீரணம்.	ஜனத்தொகை.
ஜெர்மெனி.	208,427	47,727,300
ஸ்விட்ஸர்லாண்ட்	15,964	3,128,000
ஐக்கியமாகாணங்கள்	3,557,000	63,128,000
ஆஸ்ட்ரேலியா.	3,000,000	4,000,000
ருஷியா.	2,095,504	84,495,000
இங்கிலாண்ட், ஸ்காட்லாண்ட், வேல்ஸ்	58,320,	32,000,000
பிரான்ஸ்.	204,147	39,904,746
இடலி.	93,640	29,537,091
இந்தியா.	1,474,910	290,000,000

நாடு.	ஜனத்தொகை.	விஸ்தீரணம்.	ப்ரைமரி படிப்பு படித்துக்கொண்டிருப்பவர்கள்.	காலேஜ்களில் படிப்பவர்கள்
சென்னை இராஜதானி.	38,623,066	134,082	700,000	4000
ஐக்கிய மாகாணங்கள்.	63,128,000	3,557,000	12,435,297	32,755
ஜெர்மெனி.	47,727·300	208,427	6,500,000	29,766
இங்கிலாந்து. ஸ்காட்லண்ட், வேல்ஸ்.	32,000,000	58,320,	3,283,789	16,340

	ஆயிரம் பெயர்களுள்.																											
	சென்னை இராஜதானியில்																						இங்கிலாந்தில்.			ஐக்கிய மாகாணங்களில்.		
	தெரி *			தெரியா ‖			தமிழ் தெரி.		இங்கிலீஷ் தெரி.			இந்துக்களுக்குள் தெரி.			இந்து தெரியா.			[illegible]		இந்து-இங்கிலீஷ் தெரி.			தெரி.			தெரி.		
	மொ.	ஆண்.	பெண்.	மொ.	ஆண்.	பெண்.	ஆண்.	பெண்.	மொ.	ஆண்.	பெண்.	மொ.	ஆண்.	பெண்.	மொ.	ஆண்.	பெண்.	ஆண்.	பெண்.	மொ.	ஆண்.	பெண்.	மொ.	ஆண்.	பெண்.	மொ.	ஆண்.	பெண்.
1	2	3	4	5	6	7	8	9	10	11	12	13	14	15	16	17	18	19	20	21	22	23	24	25	26	27	28	29
0—10 வயது	7	11	2	993	989	998	6	1	...	1	...	6	11	2	994	989	998	6	1	...	...	...						
10—15 ,,	57	95	15	943	905	985	52	7	5	8	2	54	93	12	946	907	988	51	5	4	7	...						
15—20 ,,	96	166	22	904	834	978	90	9	11	19	3	92	163	17	908	837	983	89	7	9	17	...						
20-க்கு மேல்	90	175	10	910	825	890	100	4	6	12	1	37	172	7	913	828	993	99	3	5	10	...						
மொத்தம்.	63	119	9	937	881	991	67	4	5	9	1	61	116	7	939	884	993	67	3	4	8	...	836	868	804	805	838	772

* தெரி - என்றால் எழுதப்படிக்கத் தெரிந்தவர்கள்.

‖ தெரியா — என்றால் எழுதப்படிக்கத் தெரியாதவர்கள்.

அந்த நாட்டில் இல்லாமலும் ஐக்கிமாகாணங்களிலுமுள்ள கல்வியைப் பற்றிய சில விஷயங்கள்.—

		உபத்தியாயர்கள்.	மாணுக்கர்கள்.
வியாபாரம் முதலியவை கற்றுக்கொடுக்கும் பள்ளிக்கூடங்கள்.	239	1040	47,176
பெண்பிள்ளைகளுக்கு உயர்ந்த படிப்பு சொல்லிக்கொடுக்கும் இடங்கள்.	204	2123	27,143
பிரகிருதி சாஸ்திரங்களே சொல்லிக்கொடுக்கும் இடங்கள்.	90	974	10,532
மதம் கற்கும் இடங்கள்.	142	803	6,344
செவிடர்கள், ஊமைகள் கல்விகற்கு மிடங்கள்.	61	596	7,411
கண்ணில்லார் பாடசாலை.	29	623	2,411
மனவலியற்றகுழந்தைகளுக்குப் பாடசாலை.	16	636	2,942
கைத்தொழில் முதலியன கற்பிக்கும் இடங்கள்.	63	582	13,300

இம்மாதிரியானவை யொன்றுமே நம்நாட்டிற் கிடையாது.

சிற்சில சர்வகலா சங்கங்களிலுள்ள புத்தகங்களின் கணக்கு.

ஐக்கியமாகாணங்கள்	
கனக்டிகட்	173,000 புத்தகங்கள்.
இலியனாய்	145,649 „
மாஸசூஸட்	312,551 „
ந்யூயார்க்	274,334 „
ஓஹியோ	169,052 „
பென்ஸல்வேனியா	165,718 „
ருஷியா.	
காஸன்	107,000 „
க்ரீஸ்.	
ஆதன்ஸ்	130,000 „
க்ரேட் பிரிடன்	
ட்ரினிடி காலேஜ்	192,000 „
எடின்பரோ	265,000 „
லண்டன்	100,000 „
ஆக்ஸ்போர்டு பாட்லியன் ...	400,000 „
கேம்ப்ரிட்ஜ்	200,000 „
ஜெர்மேனி.	
பெர்லின்	200,000 „
ப்ரெஸ்லா	350,000 „
ட்ரெஸ்டன்	350,000 „
லீப்ஸிக்	500,000 „
பிரான்ஸ்.	
பாரிஸ்	2,290,000 „
க்ரெனோபில்...	170,000 „
போர்டோ	190,000 „

இந்தியாவிலுள்ள சர்வகலாசங்களுக்கு புத்தகங்களே கிடையா. சென்னை ராஜதானியிலுள்ள "ராஜதானி கலாசாலை"யில் 7,500 புத்தகங்கள் இருக்கின்றன.

வருஷாவருஷம புதிதாய்ப் பதிப்பிக்கப்படும் புத்தகங்களின் கணக்கு.

ஜெர்மெனி

ஜெர்மானியபாஷையில்	...	...	24,000	புத்தகங்கள்.

இடலி

இடாலியன்பாஷையில்	...	...	13,000	,,

பிரான்ஸ்

பிரென்சு பாஷையில்	...	...	12,500	,,

ஐக்கியமாகாணங்கள்

இங்கிலீஷ் பாஷையில்	...	...	5,000	,,

க்ரேட் ப்ரிடன்

இங்கிலீஷ் பாஷையில்	...	...	7,500	,,

ருஷியா

ருஷியின்பாஷையில்	...	...	3,000	,,

சென்னை இராஜதானி

தமிழ் பாஷையில்	...	...	286	,,
தெலுங்கு பாஷையில்	...	...	258	,,
மலேயாள பாஷையில்	...	...	36	,,
கன்னட பாஷையில்	...	...	25	,,

இந்தியாவில் பங்காளம்

பங்காளிபாஷையில்	...	...	896	,,

109, 110 ஆம் பக்கங்களில், இந்தியாவில் தவிர மற்றதேசங்களிலுள்ள முக்கியமான சர்வகலாசங்களின் பெயர்கள்தான் எடுத்துச்சொல்லப்பட்டிருக்கின்றன.

நாட்டினுடைய கல்வியின்நிலை அதனுடைய சர்வகலாசங்கங்களினது கணக்கினாலே தெரியுமாகையால், நாட்டினுடைய விஸ்தீரணம் ஜனத்தொகை, அதிலுள்ள சர்வகலாசங்கள் முதலியன எடுத்துச்சொல்லப்பட்டிருக்கின்றது.

மற்றவை பின்புவரும்.

ரா. ராஜமையங்கார்.

OPINIONS.

The Madras Mail :—Excellent from the point of view of the contributions to its pages, of the general get up, etc.

The Hindu :—They (Editors) seems to have secured a good staff of contributors, many of them well-known for their learning and experience......................presents a very good appearance.

இந்து நேசன் :—இப்பத்திரிகைக்கு விஷயங்க ளெழுதுவோர கல்வித்திறமையிலும் சாஸ்திர வாராய்ச்சியிலும் அநுபவத்திலும் சிறந்தவர்களா யிருக்கிறார்கள்.

PRINTED AT THE V. N. JUBILEE PRESS. MADRAS.